# க.பொ.த. (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2016
## வரலாறு - I
## புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை |
|---|---|---|---|
| (1) | 2 | (21) | 2 |
| (2) | 1 | (22) | 2 |
| (3) | 3 | (23) | 1 |
| (4) | 2 | (24) | 3 |
| (5) | 4 | (25) | 3 |
| (6) | 3 | (26) | 1 |
| (7) | 4 | (27) | 4 |
| (8) | 4 | (28) | 2 |
| (9) | 2 | (29) | 4 |
| (10) | 3 | (30) | 4 |
| (11) | 3 | (31) | 4 |
| (12) | 2 | (32) | 3 |
| (13) | 1 | (33) | 2 |
| (14) | 4 | (34) | 1 |
| (15) | 2 | (35) | 3 |
| (16) | 4 | (36) | 1 |
| (17) | 1 | (37) | 3 |
| (18) | 2 | (38) | 1 |
| (19) | 1 | (39) | 3 |
| (20) | 3 | (40) | 4 |

The National e-learning Portal for The General Education


/பக். 2 ஐப் பார்க்க.

## க.பொ.த. (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

### வரலாறு - II

### புள்ளி வழங்கும் திட்டம்

1. அ. (i)





**1 × 12 = 12 புள்ளிகள்**

/பக். 3 ஐப் பார்க்க.

க.பொ.த. (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

1. அ. **(ii)**




**1 × 06 = 06 புள்ளிகள்**

/பக். 4 ஐப் பார்க்க.

## பகுதி I

1. (ஆ) (i) *A* - இபின் பதுதா
*B* - நிக்கலஸ் கொப்பர்னிகஸ்
*C* - அறிஞர் சித்திலெப்பை
*D* - கொத்மலை நீர்த்தேக்கம் (1 × 4 = 4)

(ii) 1. சிவன் கோயில்
2. பொலன்னறுவை
3. சோழர்
4. கருங்கல் (1 × 4 = 4)

(iii) 1. வேர்சேல்ஸ் மாளிகை
2. பிரான்ஸ்
3. பூர்போன் அரச வம்சம்
4. நீர்ப்பூங்கா, நீர்நிலைகள், மலர்ப் பூங்கா (இவைகளில் ஒன்றிற்கு 01 புள்ளி)
(1 × 4 = 4)

## பகுதி II

2. (i)
- பாகியன்கலை
- பட்டதொம்பலென
- கித்துல்கல பெலிலென
- சீகிரி பொத்தானலென
- அலிகல லென (இவை போன்ற மூன்று குகைகள்) (1 × 3 = 3)

(ii)
- சுடப்பட்ட மட்பாண்டங்களின் பாவனையின் ஆரம்பம்
- முறையான மரணச் சடங்குகளைப் பின்பற்றுதல்
- இரும்பினைப் பயன்படுத்துதல்
- நிலையான குடியிருப்புகளை அமைத்தல்
- விவசாயத் தொழில் ஆரம்பமாதல் (இவற்றுள் இரண்டு) (2 × 2 = 4)

(iii)
- இரும்பு ஆயுதம் செய்தல் / இரும்பு உபகரணங்கள்
- மட்பாண்டங்கள் உற்பத்தித் தொழினுட்பம் (நிறந்தீட்டப்பட்ட மட்பாண்டம்)
- வீடுகள் கீழிறங்காமல் இருக்கும் பொருட்டுப் பொருத்தமாக அமைத்தல்
- நிலத்துக்கு குத்தாகச் சுவர்களை அமைத்தல்
- வனைதல் சில்லினைப் பயன்படுத்துதல்
- மணிகள் செய்யும் தொழினுட்பம்

விடயத்திற்கு 02 புள்ளிகள்
விளக்கத்திற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

/பக். 5 ஐப் பார்க்க.

**(iv)**
- குடியிருப்புக்கள் சுயாதீனமாக செயற்படல்
- குளத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைதல்
  (உ-ம் : சுமனவாவி காம, விகாரவாவி காம, ஹுன்திரிவாபி காம, கடகவாவி காம)
- பல்வேறு தொழில்களின் அடிப்படையில் குடியேற்றங்கள் அமைதல்
  உ-ம் : விவசாயிகள் வாழ்ந்த கிராமம் - கசீகாரகாம
  இடையர்கள் வாழ்ந்த கிராமம் - கோபாலகாம
  மீனவர்கள் வாழ்ந்த கிராமம் - கேவட்டகாம ...... இவை போன்றவை
- செயல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட கிராமங்கள் இருந்தமை
  உ-ம் : துறைமுகங்களை அண்மித்து இருந்த கிராமங்கள் - பட்டாணகாம
  வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் - நியம்கம்
  வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் - ஓலகம்
- பல்வேறு புவியியல் பிரதேசங்களில் நிலவிய இயற்கை வளங்களின் அடிப்படையில் அமைந்த கிராமங்கள் தோற்றம் பெறல்.
- நகரக் குடியிருப்புக்கள்.
- குடியிருப்புக்களின் ஒழுங்கமைப்பும், நிருவாகமும் முறையாக இருந்தமை

2 விடங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்கத்திற்கு 04 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

3. **(i)** பண்டுகாபய மன்னன், துட்டகாமினி மன்னன், புத்ததாச மன்னன், முதலாம் உபதிஸ்ஸ மன்னன், நான்காம் காசியப்ப மன்னன், ஐந்தாம் மகிந்தன், மகா பராக்கிரமபாகு மன்னன்

(1 × 3 = 3)

**(ii)** இரும்பு, செம்பு, தங்கம், இரத்தினக்கல், யானைத்தந்த செதுக்கல், வனைதல், நெசவு (1 × 4 = 4)

**(iii)**
- நகரங்களை அண்மித்து வர்த்தகம் வளர்ச்சியுற்றுக் காணப்படல்.
  (அனுராதபுரத்தில் கால சுமண எனும் வர்த்தக நிலையம்)
- உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நிலையங்கள்
- வெளிநாட்டில் வர்த்தக அமைப்புக்கள் காணப்படல்
- வர்த்தகம் தொடர்பாக அரசர்களால் அமுல் செய்யப்பட்ட சட்டங்கள்
  (நான்காம் உதய மன்னனின் சொரபொர வெவக் கல்வெட்டு)
- இந் நாட்டில் வெளிநாட்டு வர்த்தகர்கள் குடியிருந்தமை
- நாட்டைச் சுற்றித் துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருந்தமை
- வர்த்தகக் கிராமங்கள் இருந்தமை

விளக்கத்திற்கு 02 புள்ளிகள்
விளக்கத்திற்கு 1.5 × 2 = 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

**(iv)**
- நகர மக்கள் பல்லின பண்பாட்டினை உடையவர்களாக இருந்தமை. (தென் இந்தியர், கிரேக்கர், மாசிடோனியர், ஜாவா, கம்போடியர்கள்)
- தமிழ்ப் பிக்குமார் இருந்தமை
- கலப்பினத் திருமணங்கள் நடைபெற்றமை
- பல்வேறு இனங்களுக்கு அரசாங்கப் பதவிகள் வழங்கப்படல் (தமிழ் அதிகாரி - வெளிநாட்டவரும் படையில் சேர்க்கப்பட்டமை)
- இஸ்லாமிய பக்தர்கள் சிவனொளிபாதம் சென்றமை
- கலை நிர்மாணங்கள்ில் பல்வேறு இனத்தவர்களின் சம்பிரதாயங்களைக் காணக்கூடியதாக இருந்தமை

2 விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 04 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

4. **(i)** நான்காம் மகிந்தன், மூன்றாம் உதயன், ஐந்தாம் காசியப்பன், ஆமண்ட காமினி அபயன், நிசங்கமல்லன் (1 × 3 = 3)

**(ii)** *A* - தக்கபதி *B* - கெதி அட, கெட்டு கனப
*C* - போஜக்கபதி *D* - மதரமஞ்சக்க (1 × 4 = 4)

**(iii)**
- ஆட்சியில் பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
  உ-ம் : அனுலா, சூளசீவலி, லீலாவதி, கல்யாணவதி ஆகிய அரசிகள்
- தாய்க்குரிய மரியாதை அளிக்கப்படல்.
  உ-ம் : பிக்குமார் விகாரமகா தேவிக்குக் கூறியவையும் அதற்கு அவள் அளித்த பதிலும்.
- கல்வியறிவில் சிறந்த பெண்கள் மதிப்புக்குரியவர்களாக விளங்கியமை.
  உ-ம்: சத்தர்மாலங்காரய, தம்பியா அட்டுவா கெட்ட பதய, சஹஸ்ஸவத்துப்பகர என்பவற்றில் கூறப்பட்டுள்ளவை.

2 உதாரணங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

**(iv)** கஞ்சியை உணவாகக் கொண்டமை பற்றி உதாரணங்களுடன் விளக்குதல்.
கறிகளைச் சுவையூட்டுவதற்குப் வாசனைத் திரவியங்கள் மற்றும் கறிவேப்பிலை என்பவற்றைப் பயன்படுத்தியமை
பால் பயன்படுத்தப்படல் (பால், தயிர், நெய்)
மாமிச உணவு
காய்கறி, கிழங்கு வகைகள், கீரை வகைகள் என்பன உணவில் சேர்க்கப்படல்.
சுகதேகியாக வாழும் பொருட்டும் சத்துக்காகவும் உணவு உட்கொள்ளப்படல்.
செயற்கை உணவு பயன்படுத்தப்படாமை
போசணை குறையாத விதத்தில் உணவைத் தயாரித்தல்
போன்ற விடயங்கள்

2 உதாரணங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 04 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

/பக். 7 ஐப் பார்க்க.

5. **(i)** கோட்டை, சீதாவாக்கை, றைகம (1 × 3 = 3)

**(ii)**
- ★ தர்மபால மன்னன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியமை
- ★ போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக செயற்படல்
- ★ மக்களுக்குப் போர்த்துக்கேயரால் ஏற்பட்ட இன்னல்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்காமை.

(2 × 2 = 4)

**(iii)** **சவால்கள்**
- முறையான அரச உரிமை இன்மை
- கண்டி இராசதானியைப் போர்த்துக்கேயரின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க வேண்டிய நிலை இருந்தமை.
- கண்டி இராசதானியை சீதாவக்கையின் தலையீட்டிலிருந்து விடுவித்தல்.
- சீர்குலைந்திருந்த புத்த சமயத்தை எழுச்சியுறச் செய்தல்.
- கண்டி இராசதானியின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்.

விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

**(iv)** **பொருளாதாரம்** :-
- நுகர்வை அடிப்படையாகக் கொண்டிருந்தமை
- சுயதேவையை அடிப்படையாகக் கொண்டிருந்தமை
- மலைப்பாங்கான நிலமானபடியால் நெற்செய்கைக்கான பிரதேசம் வரையறுக்கப்பட்டிருந்தமை
- பள்ளத்தாக்குகளில் படிமுறையில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டமை
- பெருவாரியான நிலம் சேனைப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படல்
- குரக்கன், சோளம், தினை, சாமை போன்ற தானிய வகைகளும், கிழங்கு வகைகளும் பயிரிடப்பட்டமை
- பலாக்காய், ஈரப்பலாக்காய், மிளகு, சாதிக்காய், கராம்பு, பாக்கு, மரக்கறி, பழவகை என்பன செய்கை பண்ணப்படல்
- மேலதிக பயிர்கள் மூலமும் உணவுத் தேவை பூர்த்தி செய்யப்படல்
- இரும்பு, உலோகம், மரம், அரக்கு முதலான கைத்தொழில்கள் முன்னேற்றம் அடைந்திருந்தமை
- விவசாயத் தேவைகளுக்கும், பால் பெறுவதற்கும் மிருக வளர்ப்பு இடம்பெற்றமை

**சமூகம்** :-
- நாட்டின் நிலம் அனைத்தும் அரசனுக்கே உரியதென ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை.
- உரிமையையும், அனுபவித்தலையும் அடிப்படையாகக் கொண்டு நிலம் பல்வேறு வகைப்படுத்தப்பட்டிருந்தமை.
- மக்கள் தாம் அனுபவிக்கும் நிலத்திற்காக ஏதாவது ஒரு சேவையை அல்லது குறிப்பிட்ட பொருள்களை மன்னனுக்கு வழங்க வேண்டியிருந்தமை.
- பொது மக்களால் வழங்கப்படும் சேவை, இராஜகாரியம் எனப்படல்.
- கிராமிய சமூகம் காணப்படல்.
- கிராமங்கள் சுயதேவைப் பூர்த்தி அடைந்திருந்தமை.
- சமூகம் குலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததோடு, அவ்வக் குலத்திற்கான பொருளாதார

/பக். 8 ஐப் பார்க்க.

நடவடிக்கைகளும் இருந்தமை.

- திருமணங்கள் தத்தமது குலத்தவர்களிடையே இடம்பெறல்.
- தீக, பின்ன, ஒரே வீட்டில் சாப்பிடுதல் என மூன்று வகைத் திருமணங்கள் இடம்பெறல்.
- கிராமிய சமூகத்தில் அனைத்து நடவடிக்கைகளும் உழைப்புப் பரிமாற்று முறையில் (அத்தம்) இடம்பெற்றமை.
- குடும்பம் பிரதான அலகாக இருந்தமை.
- நற்பண்புகளைக் கைக்கொள்ளல் சமூகத்தின் பிரதான இயல்பாக இருத்தல்.
- கிராமிய வாழ்க்கையின் பிரிக்க முடியாத அம்சமாக விகாரைகள் காணப்படல்

2 உதாரணங்களுக்கு 03 புள்ளிகள்
விளக்குவதற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

6. **(i)** *A* - தலவாக்கலை
*B* - லுணுவில
*C* - அகலவத்த (1 × 3 = 3)

**(ii)**
- கட்டாய இராஜகாரிய முறை ஒழிக்கப்படல்
- நிலங்கள் விற்றல் தொடர்பான கொள்கை செயற்படுத்தப்படல்
- சிவில் உத்தியோகத்தவர்கள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட அனுமதி அளித்தல்
- அரசின் வர்த்தக ஏகபோக உரிமை ஒழிக்கப்படல்
- தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படல்

(2 × 2 = 4)

**(iii)**
- ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை
- வெளிநாட்டவர் அதிகமாகக் கோப்பிப் பயிர்ச் செய்கையில் முதலீடு செய்தல்
- தென்னிந்தியத் தொழிலாளர்களிடமிருந்து குறைந்த வேதனத்திற்கு ஊழியத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமை
- ஆளுனர் எட்வட் பார்ன்ஸ் கோப்பியின் ஏற்றுமதி வரியைக் குறைத்தமை
- கோப்பிப் பயிர்ச்செய்கை மூலம் அதிக இலாபம் பெறக்கூடியதாக இருந்தமை

விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

**(iv)** **அனுகூலங்கள்**
- சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழி அறிவு நாட்டினுள் பரவியமை
- போக்குவரத்து வளர்ச்சியடைதல்
- தொடர்பாடல் முன்னேற்றமடைதல்
- கைத்தொழில் புரட்சியின் சாதகமான தாக்கம் இந்நாட்டில் ஏற்படல்
- பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகமாதல்
- ஏற்றுமதிப் பயிர்கள் அறிமுகமாதல்

/பக். 9 ஐப் பார்க்க.

**பிரதிகூலங்கள்**

- மேல்நாட்டுக் கலாசாரத்தின் தாக்கத்தால் உள்நாட்டுக் கலாசாரம் வீழ்ச்சியடைதல்
- மதுபானம் அருந்துதல் போன்ற தீய பழக்கங்கள் ஏற்படல்
- சுயதேவைப் பொருளாதாரம் வீழ்ச்சியுறல்
- நற்பண்புகள் அருகியமை
- தேசிய அறிவு பின்னடைவை நோக்கிச் செல்லுதல்

விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 04 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

7. **(i)**
- உச்ச நீதிமன்றம்
- மேல் நீதிமன்றம்
- மாவட்ட நீதிமன்றம்
- மஜிஸ்ரேட் நீதிமன்றம் (நீதவான் நீதிமன்றம்)
- அரசியல் யாப்பு நீதிமன்றம் (1 × 3 = 3)

**(ii)**
- பாராளுமன்றத்தைக் கூட்டுதல்
- அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்துதல்
- பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல்
- பாராளுமன்றத்திற்கு சுற்று நிருபங்கள் அனுப்புதல்
- பொதுத்தேர்தலை அடுத்து வரும் முதலாவது அமர்வுக்குத் தலைமை வகித்தல்
- பாராளுமன்றத்தைக் கலைத்தல் (2 × 2 = 4)

**(iii)**
- சுதந்திரம், சமத்துவம், அடிப்படை உரிமைகள் என்பன அரசியல் யாப்பில் இடம் பெற்றமை
- போட்டிப் பரீட்சைகள் மூலம் தொழில்கள் வழங்கப்பட்டமை
- இலவசக் கல்வி, சுகாதார சேவை என்பவற்றை வழங்குதல்
- கிராமப் பாடசாலைகளை முன்னேற்றுதல்
- தொற்றுநோய்கள் பரவுவதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- உணவு முத்திரை முறையை செயற்படுத்தல்

போன்ற விடயங்கள்

விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

/பக். 10 ஐப் பார்க்க.

**(iv)**
- குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தி நிலம் வழங்கி, அவற்றில் நெல் மற்றும் பயிர்களைப் பயிரிடுதல்
- மகாவலி அபிவிருத்தித் திட்ட முறை
- பல்வேறு பயிர்களின் பொருட்டு ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுதல்
- தோட்டப் பயிர்ச்செய்கையை முன்னேற்றும் பொருட்டு நடவடிக்கை எடுத்தல்
- இது ஏற்றுமதிப் பயிர்களுக்காக நிறுவனங்களை ஏற்படுத்தல்
  உ-ம் : அரச பயிர்க் கூட்டுத்தாபனம் / ஜசவசம, உசவசம
- விவசாய ஓய்வூதிய முறை
- உற்பத்தியின் பொருட்டு உத்தரவாத விலை முறை
- உர உதவி வழங்கல்

போன்ற விடயங்கள்

விடயங்களுக்கு 03 புள்ளிகள்
விளக்குவதற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

## பகுதி III

8. **(i)** பிரான்ஸ், பெல்ஜியம், ஆஸ்திரியா, ஹங்கேரி, பிரஷ்யா (1 × 3 = 3)

**(ii)**
- உலகம் முழுவதிலும் சனத்தொகை அதிகத்தமையால் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தமை
- ஐரோப்பாவில் போக்குவரத்து நடவடிக்கை முன்னேற்றமடைதல்
- பிரான்சிலும் ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டமை (2 × 2 = 4)

**(iii)**
- அதிக அளவில் நகரங்கள் தோற்றம் பெற்றமை
- பொருட்களின் தொகை அதிகரித்ததால் அவற்றின் விலை குறைந்தமை
- தொழிலுக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தமை
- வகுப்பு ரீதியான சமூகம் தோற்றம் பெறல்
- தொழிற் சங்கங்களும், ஆர்ப்பாட்டங்களும்
- சுற்றாடல் மாசடைதல்

விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

**(iv)**
- தொடர்புசாதனங்கள், போக்குவரத்துத் துறை என்பவற்றில் இன்று வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக விளக்கப்படுதல் வேண்டும்.

விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 04 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

/பக். 11 ஐப் பார்க்க.

9. **(i)** ஐக்கிய அமெரிக்க அரசுகள், பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி (1 × 3 = 3)

**(ii)**
- நாடுகளுக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை சமாதானமாகத் தீர்த்தல்
- எதிர் காலத்தில் உலக யுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தவிர்த்தல்
- சர்வதேசப் புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும் கட்டி எழுப்புதல்
- சிறிய நாடுகளின் சுதந்திரம், சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாத்தல்
- மனிதகுல ஒற்றுமை மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாத்தல் (2 × 2 = 4)

**(iii)**
- உலகின் போர்ப் பலமிக்க வல்லரசாகத் திகழ்ந்த ஐக்கிய அமெரிக்க அரசுகள் சர்வதேச சங்கத்தில் இடம் பெறாமை
- வல்லரசாகிய ரஷ்யாவை சர்வதேச சங்கத்தில் இருந்து தூர ஒதுக்கி வைத்தமை
- சர்வதேச சங்கத்திற்கு இராணுவமொன்று இல்லாமை
- சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகித்த பலம் வாய்ந்த நாடுகள் பொதுத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்காது தமது நோக்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டமை
- உலக சமாதானம் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள சங்கத்தால் முடியாமை

விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 03 புள்ளிகள்
மொத்தம் 05 புள்ளிகள்

**(iv)**
- பிரச்சினைகள் தீவிரமடையுமுன்னர் பேச்சுவார்த்தைகள் மூலம் அவற்றிற்குத் தீர்வு காணல்
  (உ-ம் : சுயெஸ் கால்வாய் பிரச்சினை, வளைகுடா நெருக்கடி, கியூபாவின் ஏவுகணை நெருக்கடி)
- பொருளாதாரத் தடை விதித்தல் (உ-ம் : வட கொரியாவுக்கு எதிராக)
- அணு ஆயுதங்களைக் குறைக்கவும், அவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல்
  (உ-ம் : வட கொரியா, ஈரான்)
- சமாதானப் படையை ஈடுபடுத்தல்

விடயங்களுக்கு 02 புள்ளிகள்
விளக்குவதற்கு 04 புள்ளிகள்
மொத்தம் 06 புள்ளிகள்

The National e-Learning Portal for The General Education